ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1982/27 - 2016 අගෝස්තු මස 31 වැනි බදාදා - 2016.08.31

1982/27 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டத்திம் (அத்தியாயம் 460 )

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: 4/3/1/144.

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியர் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தல் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், களுத்துறை பிரதேச செயலகப் பிரிவில், 725 களுத்துறை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் இல. மு.பி.க. 4605 எனும் வரைபடத்தில் ஹெக்டெயார் 0.6840 விஸ்தீரணமுடைய காணித்துண்டு.

1. **துண்டு இல. 01**

காணியின் பெயர்: மோதரவெல்ல அல்லது கபுகொட வத்த; விபரம்: வீட்டுத்தோட்டம், 30-40 வயதுடைய கலப்புப் பயிர்ச் செய்கையும் 04 நிலையான கட்டிடங்களும் 02 நிலையான கட்டிடங்களின் பகுதியும் புத்தர் சிலை அமைந்துள்ள கட்டிடமும் மலசல கூடத்தின் பகுதியும் உண்டு; உரிமை கோருவோர்: கண்டுபிடிக்க முடியவில்லை; விஸ்தீரணம்: 0.6840 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியகாரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு களுத்துறை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப் படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் காணிக்குரிய தமது உரிமையை உறுதிப்படுத்துவதற்காக உரிய காணியின் உறுதி, வரைபடம், ஏனைய ஆவணங்கள் ஆகியவற்றை நேரில் சமர்ப்பிக்குமாறும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

புத்திகா ருவனி சமரதுங்க,
பிரதேச செயலாளர்,
களுத்துறை.

பிரதேச செயலகம்,
களுத்துறை,
2016, ஓகத்து 29.

9 - 638

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டத்திம் (அத்தியாயம் 460 )

### 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

பிரதேச செயலாளர் இல.: 3/3/2/54.

காணி அபி. அமைச்சின் இல.: எல்டி/05/2009/பிசீ/92.

காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் 2014.01.06 ஆந் திகதிய 1844/46 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் (அதிவிசேட) வரித்தமானியின் உரிமை கோரல் பரிசீலணை 2014.03.19 ஆந் திகதி மு.ப. 10.00 மணியென குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அது 2016.10.12 ஆந் திகதி மு.ப. 09.00 மணியெனத் திருத்தப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

ஜீ. எச். கே. கன்னன்கர,
பிரதேச செயலாளர்,
ஹோமாகம.

பிரதேச செயலகம்,
ஹோமாகம,
2016, ஓகத்து 29.

9 - 639